**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண். 1/2023**
**CNR No: TNSV08-000001-2023**

1.அழகு
2.சுரேஷ்கண்ணன் ..... வாதிகள்

**/ எதிர் /**

1.புஷ்பவள்ளி
2.அழகு, க/பெ. முத்துச்சாமி
3.அழகு, த/பெ. வெங்கு
4 காட்டுராஜா
5.வெங்குச்சாமி ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 20.01.2023ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு 23.02.2023ம் தேதியன்று வழக்கு வாய்தாவிற்கு எடுக்கப்பட்டு 18.03.2026ம் தேதியன்று என் முன்னால் விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.லெஷ்மணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வாதி தாவா 2ம் இலக்க சொத்தான மானாமதுரை வட்டம், கீழப்பசலை குரூப், வன்னிக்குடி கிராமத்தில் உள்ள பட்டா எண்.866க்கு உட்பட்ட சர்வே எண்.340/11A – 0.4.10 ஏர்ஸ், சர்வே எண்.340/11 B – 0.6.40 ஏர்ஸ் பாதையாக பயன்படுத்தி வருவதை வாதிகளின் வசதியுரிமையாக விளம்புகை பரிகாரம் வழங்கியும், தாவா 2ம் இலக்க சொத்தில் வாதிகள் வசதியுரிமையாக பாதையாக பயன்படுத்தி வருவதை பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ எக்காலத்திலும் தடையிடர் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:28:05 +0530

**1) வழக்குரையின் சுருக்கம்:-**

தாவா சொத்தானது இரண்டு இலக்க சொத்துக்கள் என்றும், தாவா 1ம் இலக்க புல எண்.340/13, 0.10.50 ஏர்ஸ் சொத்தானது வாதி அழகு பெயரில் உள்ளதாகவும், தாவா 2ம் இலக்க புல எண்.340/11 A, 10 செண்ட் மற்றும் புல எண்.340/11B, 0.06.40 ஏர்ஸ் சொத்தானது 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனா்ர பெயரிலும், 1ம் பிரதிவாதியின் கணவருடைய தகப்பனார் பெயரிலும் உள்ளதாகவும், வாதியினுடைய இடத்திற்கு செல்லவேண்டும் என்றால் புலஎண்.340/11A, புலஎண்.340/11B ஆகிய நிலங்களின் வழியாக தான் செல்லமுடியும் என்றும், இதுவரை பழங்காலமாக வாதியும், வாதியின் மகன்களும் பிரதிவாதியின் இடத்தின் வழியாக தான் நடந்து சென்று வருவதாகவும், தாவா 1ம் இலக்க சொத்தில் விவசாய பயன்பாடு மற்றும் சகல பயன்பாட்டிற்கும் தாவா 2ம் இலக்க சொத்துக்கள் வழியாக பாதையாக வசதியுரிமையாக எவ்வித தடையும் இன்றி பயன்படுத்தி வந்துள்ளதாகவும், ஆனால் தற்போது கடந்த இரண்டு மாதங்களாக பிரதிவாதிகள் தங்கள் இடத்தின் வழியாக நடக்கக்கூடாது என்று தடுத்து வருவதாகவும், வாதியின் மகன்கள் 5 நபர்களும் தாவா 1 வது இலக்க சொத்தில் சுமா்ர 10 அடி அகலமுள்ள பாதை பிரித்து பொது பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் தாவா 2ம் இலக்க சொத்தில் வாதிகள் பயன்படுத்தி வருவதை கடந்த ஆகஸ்டு 15ம் தேதியன்று பிரதிவாதிகள் இந்த பாதையில் இனிமேல் நடக்கக்கூடாது என்று தடுத்தாகவும், தாவா 2ம் இலக்க சொத்தை தவிர வேறு மாற்றுப்பாதையோ, வேறு மாற்று வழிகளோ, வாதிகளுக்கு கிடையாது என்றும், தாவா 2ம் இலக்க சொத்தில் பாதையாக வசதியுரிமையாக பயன்படுத்தி வருவதை பிரதிவாதிகள் தடுக்கக்கூடாது என்று கடந்த 29.09.2022ம் தேதி அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், எனவே தாவா 2ம் இலக்க சொத்தை வாதிகள் பாதையாக பயன்படுத்தி வருவதை வாதிகளின் வசதியுரிமையாக விளம்புகை செய்தும், தாவா 2ம் இலக்க சொத்தை வாதிகள் வசதியுரிமையாக பாதையாக பயன்படுத்தி வருவதை பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ எக்காலத்திலும் தடையிடர் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:28:27 +0530

**2) எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

பிராதில் கூறியுள்ள விஷயங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்கள் தவிர மற்றவைகளை வாதிகளே நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், தாவா 1 வது இலக்க சொத்து மட்டுமே 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா 2 வது இலக்க புலஎண்.340/11ஏ மற்றும் 340/11பி ஆகிய சொத்துக்களில் 1ம் வாதிக்கோ அவரது வாரிசுகளுக்கோ எவ்வித பாத்தியமும், அனுபவமும் எக்காலத்திலும் இல்லை என்றும், தாவா 1 வது இலக்கத்திற்கு தாவா 2 வது இலக்க வழியாக எந்த காலத்திலும் 10 அடி அகலமுள்ள பாதை இருந்து வந்ததில்லை என்றும், அதனால் தான் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் தாவா சொத்துக்களின் இயற்கை அமைப்பை காட்ட நீதிமன்ற ஆணையாளர் நியமனம் கோரி எவ்வித நடவடிக்கையும் வாதிகள் தரப்பில் எடுக்கப்படவில்லை என்றும், 10 அடி அகலப்பாதை என்பது பூஸ்தியிலும் ஆவணங்கள் படியும் இல்லாததால் தான் வருவாய் துறை ஆவணங்களில் பதிவாகவில்லை என்றும், தாவா சொத்துக்களில் முத்துச்சாமிக்கு யாதொரு பாக ஒதுக்கீடும் செய்யப்படாத நிலையில், முத்துசாமியின் மனைவி அழகு என்பவரை தாவா வழக்கில் 2ம் பிரதிவாதியாக அவசியமற்ற முறையில் சேர்க்கப்பட்டுள்ளதால், தாவா வழக்கு Misjoinder of Unnecessary Party என்ற தோஷத்திற்கு உள்ளாகி உள்ளது என்றும், தாவா 1வது இலக்கச் சொத்திற்கு கிழக்கே தென்வடலாக பாசனவாய்க்கால் செல்வதாகவும், மேற்படி வாய்க்காலின் இரு கரைகளாக உள்ள 2 பெரிய வரப்புகள் மூலமே வாதிகள் 1 வது இலக்க சொத்திற்கு நினைவிற்கு எட்டாத காலம் முதல் நடந்து சென்று விவசாய வேலைகள் செய்து வரும் விபரத்தை மறைத்து தாவா 2 வது இலக்க சொத்திற்குள் 10 அடி அகலப்பாதை உள்ளதாக பிராதில் பொய்யாக பிரஸ்தாபித்துள்ளதாகவும், தாவா 2வது இலக்க சொத்துக்களின் மேற்கு பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதற்கான இழப்பீடு தொகையை 1 ம் பிரதிவாதிக்கு அரசு வழங்கியுள்ளது என்றும், தாவா 2 வது இலக்க சொத்தும் நஞ்சையாக வைத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தங்களது தனித்த பாத்தியத்தில் வைத்து சட்டப்படியான உரிமையுடன் அனுபவம் செய்து வருவதால், வாதிகளுக்கு யாதொரு உரிமையும் சட்டப்படி கிடையாது என்றும், வாதிகள் தாவா வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களும் வாதிகளுக்கு சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:28:47 +0530

3) வாதிகள் தரப்பில் சாட்சியாக 2ம் வாதி சுரேஷ்கண்ணன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக 5ம் பிரதிவாதி வெங்குச்சாமி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.15 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பூமிநாதன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் சாட்சிய, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய எழுவினாக்கள் யாதெனில்,**

| | |
|---|---|
| 1 | தாவா 2ம் இலக்க சொத்து பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறதா ? |
| 2 | தாவா 2ம் இலக்க சொத்தை பொறுத்து வாதிகள் கோரிய வசதியுரிமை விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ? |
| 3 | தாவா 2ம் இலக்க சொத்தை பொறுத்து வாதிகள் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா ? |
| 4 | வாதிகளுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன ? |

**5) எழுவினா 1-க்கான தீர்வு: தாவா 2ம் இலக்க சொத்து பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறதா ?**

5.1) இவ்வழக்கில் தாவா 1ம் இலக்க சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா 1ம் இலக்க சொத்தில் விவசாய பயன்பாட்டிற்கும் மற்றும் சகல பயன்பாட்டிற்கும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா 2ம் இலக்க சொத்து வழியாக பாதையாக வசதியுரிமையாக எவ்வித தடையும் இன்றி பயன்படுத்தி வந்ததாகவும், ஆனால் தற்போது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நடக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் தடுத்து வருவதாகவும், தாவா 2ம் இலக்க சொத்தை தவிர வேறு மாற்றுப்பாதையோ, வேறு மாற்று வழிகளோ தங்களுக்கு கிடையாது என்றும், தாவா 2ம் இலக்க சொத்து மட்டுமே தங்களுக்கு பாதை என்றும், எனவே தாவா 2ம் இலக்க சொத்தை பொறுத்து வசதியுரிமை (Easement Rights) கோருவதாக வாதி தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:29:05 +0530

**5.2) வா.சா.1 ஐ, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, அவர் தனது சாட்சியத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.**

**1)** வா.சா.1 தனது சாட்சியத்தில் ..."பாதை என்பதற்கான புல எண்கள்.340/11A மற்றும் 340/11B ஆகியவைகள் தான் பாதை என்றும், அதன் பட்டா எண்.866 என்றும், வெள்ளையக்கோன் மகன் வெங்கு பெயரில் பட்டா இருக்கிறது என்றால் சரிதான்"... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**2)** வா.சா.1 தனது சாட்சியத்தில் ..."புல எண்கள்.340/11A மற்றும் 340/11B–க்கு புலப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் என்றும், வருவாய்த்துறை ஆவணங்களில் பாதை என்று இல்லை என்றால் சரிதான்".... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**3)** வா.சா.1 தனது சாட்சியத்தில் ..."தாவா 1, 2 இலக்க சொத்திற்கு வா.சா.ஆ.2 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பாதை என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான் என்றும், தான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 பட்டா ஆனது தாவா 2ம் இலக்க சொத்தான வெங்கு பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான்".... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4)** வா.சா.1 தனது சாட்சியத்தில் ..."வம்சாவழி ஜாபிதா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், வம்சாவழி விபரத்தை நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரிதான் ".... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:29:20 +0530

**5)** மேலும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், ..."வெள்ளையக்கோனாருக்கு 4 ஆண் பிள்ளைகள், 2 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான் என்றும், அந்த 4 ஆண் பிள்ளைகள் வெங்கு, முத்தையா, அழகு மற்றும் சுப்பையா என்றால் சரிதான் என்றும், தான் தாக்கல் செய்துள்ள பிராது, நிரூபண வாக்குமூலத்தில் 4 ஆண் பிள்ளைகளுக்கும் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லியுள்ளேன், அதற்கு ஆவணம் உள்ளதா என்று கேட்டால் 4 பேருக்கும் தனித்தனியாக பட்டாக்கள் ஏற்பட்டுவிட்டது, 4 பேருக்கும் தனித்தனியாக பட்டா ஏற்பட்டது 1985ல் யூ.டி.ஆர் சர்வேயில் ஏற்பட்டது என்றால் சரிதான்".... என்றும் தெரிவித்துள்ளார்.

**6)** வா.சா.1 தனது சாட்சியத்தில் ..."வெங்கு என்பவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், முத்தையா என்பவரும் இறந்துவிட்டார் என்றும், மலைச்சாமிக்கு புஷ்பவள்ளி என்பவர் மனைவி என்றும், அவர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி என்றும், மலைச்சாமி வெங்குவின் மகன் என்றும், மலைச்சாமிக்கு புஷ்பவள்ளி உள்பட 6 வாரிசுகள் உள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் என்றும், பெயர், விபரம் தெரியாது என்றும், அதனால் மலைச்சாமியின் வாரிசுகள் 5 பேரை சேர்க்கவில்லை என்றால் சரிதான் "... என்றும் தெரிவித்துள்ளார்.

**5.3)** இதிலிருந்து வாதிகள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டா இடத்திற்கு பாதை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

**5.4)** மேலும் வா.சா.1 தனது சாட்சியத்தில், ..." தேசிய நெடுஞ்சாலையில் நிலஎடுப்பு செய்யப்பட்டதால் அதில் மலைச்சாமி இடம் எடுக்கப்பட்டுவிட்டதால் அவரது வாரிசுகள் ஒருவரை தவிர மற்றவர்களை சேர்க்கவில்லை"... என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்த விரபத்தை தான் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் ".... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:29:33 +0530

**5.5)** மேலும் வா.சா.1 தனது சாட்சியத்தில், ..." தங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகவிஸ்தி சம்பந்தப்பட்ட ஆவணங்களில் தாவா 2ம் இலக்க சொத்து பாதை உள்ள விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் என்றும், தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்பினை தெரிவிக்க நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யவில்லை என்றால் சரிதான்"... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.6)** இதிலிருந்து வாதியின் வழக்கு படி தாவா 2ம் இலக்க சொத்தை ஒரு வாதத்திற்காக பாதையாக பயன்படுத்தி வந்தது உண்மை என்று வைத்துக் கொண்டால் கூட அவர் ஏன் அவர்களுக்குள் செய்யப்பட்ட பாகவிஸ்தி பத்திரத்தில் பாதை என்று காட்டவில்லை என்பதற்கு வாதிகள் தரப்பில் போதிய விளக்கங்கள் இல்லை.

**5.7)** மேலும் தாவா பாதை பூஸ்துதியில் உள்ளது என்பதையும், வாதிகள் தாங்கள் புழங்கி வர வேறு பாதைகள் இல்லை என்பதை காட்டுவதற்கும் எவ்வித சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.8)** மேலும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், ..." தாவா 1ம் இலக்க சொத்திற்கு கிழக்கே தென்வடலாக வாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான் என்றும், அந்த தென்வடல் வாய்க்காலின் இருபுறமும் 1–1/2 அகல வரப்பு உள்ளது என்றால் சரிதான் என்றும், வாய்க்காலுக்கு வடக்கில் வன்னிக்குடி செல்லும் தார் சாலை உள்ளது என்றால் சரிதான் என்றும், அந்த வன்னிக்குடி சாலையிலிருந்து தென்வடலாக செல்லும் வாய்க்காலின் இருபுறமும் உள்ள 1–1/2 அகல வரப்பு வழியாக தாவா 1ம் இலக்க சொத்திற்கு கடந்த 40 ஆண்டுகளாக தான் சென்று வந்துகொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல"... என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:29:40 +0530

5.9) இதிலிருந்து 1–1/2 அகல வரப்பு பாதையாக தாவா 1ம் இலக்க சொத்திற்கு சென்று வருவதற்கு இருந்துள்ளது தெளிவாகிறது. எனவே தாவா 2ம் இலக்க சொத்தின் வழியாக தான் 1ம் இலக்க சொத்தை அடைய முடியும், வேறு பாதையே 1ம் இலக்க சொத்தை அடைவதற்கு பூஸ்துதியில் இல்லை என்பதை வாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை. மேலும் வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் இருந்து 1–1/2 அகல வரப்பு பாதையாக பயன்படுத்தப்பட்டு வருவது தெளிவாகிறது.

5.10) மேலும் சாட்சியங்களை சேகரிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கூடாது என்று இருந்தாலும், வழக்கு சொத்தை நீதிமன்றம் சென்று பார்வையிட இயலாத நிலையில், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு பூஸ்துதியின் இயற்கை அமைப்பு, சொரூபநிலை, வழித்தடம் குறித்த விபரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கான எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

5.11) மேற்கண்ட விவாதங்களின் படி தாவா 2ம் இலக்க சொத்தில் 10 அடி பாதை பூஸ்துதியில் உள்ளது என்பதற்கு வாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் சாட்சியங்கள் மூலம் தாவா 2ம் இலக்க சொத்து பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை வாதிகள் தரப்பு **Preponderance of Probability** நிரூபிக்கவில்லை **என்று இந்த 1ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.**

**6) எழுவினா 2-க்கான தீர்வு: தாவா 2ம் இலக்க சொத்தை பொறுத்து வாதிகள் கோரிய வசதியுரிமை விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ?**

இவ்வழக்கில் 1ம் எழுவினாவிற்கு கண்டுள்ள விடையின் படி தாவா 2ம் இலக்க சொத்து பாதையாக

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:29:48 +0530

பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை வாதிகள் தரப்பில் **Preponderance of Probability** நிரூபிக்காதநிலையிலும், தாவா 1ம் இலக்க சொத்திற்கு சென்று வருவதற்கு வேறு பாதைகள் இல்லை என்பதை வாதிகள் தரப்பில் **Preponderance of Probability** நிரூபிக்காதநிலையிலும், வாதிகள் சட்ட காலத்திற்கு மேலாக தாவா 2ம் இலக்க சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி வந்தோம் என்பதை **Preponderance of Probability** நிரூபிக்காதநிலையிலும், **வாதிகள் கோரிய வசதியுரிமை விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த 2ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.**

**7) எழுவினா 3-க்கான தீர்வு: தாவா 2ம் இலக்க சொத்தை பொறுத்து வாதிகள் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா ?**

மேற்கண்ட 2ம் எழுவினாவிற்கு கண்டுள்ள விடையின் படி, தாவா 2ம் இலக்க சொத்தில் வாதிகளுக்கு வசதியுரிமை இல்லை என்று 2ம் எழுவினாவிற்கு விடை கண்டுள்ள நிலையில், தாவா 2ம் இலக்க சொத்தை பொறுத்து **வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த 3ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.**

**8) எழுவினா 4-க்கான தீர்வு: வாதிகளுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன ?**

முக்கிய பரிகாரங்கள் வழங்கப்படவில்லை. வேறு வகையான பரிகாரங்கள் தேவையில்லை.

இவ்வழக்கில் விவாதிக்கப்படாத ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய பொருண்மைகளை முடிவு செய்வதுடன் பொருந்தி வரவில்லை. எனவே அவற்றை விவாதிக்க தேவையில்லை என்பதால் விவாதிக்கவில்லை.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:29:54 +0530

*"இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன் படி மெய்ப்பிக்கும் சுமையானது யார் பிரச்சனையில் உள்ள ஒரு பொருளை வலியுறுத்துகிறாரோ அவர் மீது தான் உள்ளது. அதனை மறுப்பவர் மீது அல்ல. இந்த வழக்கில் வாதிகள் தான் கேட்கும் பரிகாரத்திற்கு ஏற்ப தங்களது வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது."*

*"மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 102-ன் படி உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை ஒன்றில் மெய்ப்பிக்கும் சுமையானது இருதரப்பினராலுமே சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லையெனில் யார்தோல்வியுறுவாரோ அவர் மீது உள்ளது. அது அவரது வழக்கையே தோல்வியுறச் செய்யும். இந்த வழக்கை பொறுத்தவரை வாதிகள் (Preponderance of Probability) தங்களது வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது."*

*"மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 104-ன் படி ஒரு பொருண்மையை குறித்துச் சாட்சியமளிக்க ஏதாவது ஒரு நபரை இயலுமாறு செய்யும் பொருட்டு வேறு ஏதாவது ஒரு பொருண்மையை மெய்ப்பிக்க வேண்டியது தேவையாக இருப்பின், அந்தப் பொருண்மையை மெய்ப்பிக்கும் சுமையானது, அத்தகைய சாட்சியத்தை அளிக்க விரும்பும் நபரின் மீது உள்ளது. இது இந்த வழக்கிற்கு பொருந்துவதாகவே உள்ளது.* அதனடிப்படையில் வாதிகள் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 104ன் கீழ் *தங்களது* வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் *கருதுகிறது."*

*"மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106-ன் படி ஏதாவது ஒரு நபரின் அறிவிற்கு மட்டுமே தனிச் சிறப்பாக தெரிந்துள்ள எந்த ஒரு பொருண்மையையும் மெய்ப்பிக்கும் சுமையானது அவர் மீது உள்ளது. இந்த வழக்கிற்கு இது பொருந்துவதாகவே உள்ளது."* அதனடிப்படையில் வாதிகள் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.106-ன் கீழ் *தங்களது* வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் *இந்நீதிமன்றம் கருதுகிறது."*

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:30:04 +0530

எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 101, 102, 104 மற்றும் 106-ன் படி வாதிகள் *தங்களது* தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக இவ்வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரங்கள் வழங்க இயலும் நிலையில் இல்லாததால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:30:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 – சுரேஷ்கண்ணன் (2ம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.09.2022 | தாவா 1ம் இலக்க சொத்திற்கான 10(1) கணிணி பட்டா நகல் |
| வா.சா.ஆ.2 | 17.09.2022 | தாவா 1ம் இலக்க சொத்திற்கான வரைபடம் கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 29.09.2022 | வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.4 | --- | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.5 | 01.10.2022 | 2ம் பிரதிவாதிக்கு, வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட கவர் அசல் |
| வா.சா.ஆ.6 | 01.10.2022 | 3ம் பிரதிவாதிக்கு, வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட கவர் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | 01.10.2022 | 4ம் பிரதிவாதிக்கு, வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட கவர் அசல் |
| வா.சா.ஆ.8 | 17.09.2022 | தாவா 2ம் இலக்க சொத்திற்கு பட்டா எண்.866ல் வெங்கு என்பவர் பெயரில் உள்ள 10(1) கணிணி பட்டா நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**

பி.வா.சா.1 – வெங்குச்சாமி (5ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 – பூமிநாதன்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 28.06.1983 | 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனார் வெங்கு பெயரில் தாவா 2 வது லக்கச் சொத்திற்குரிய UDR பட்டா அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 01.05.2013 | தாவா 2வது இலக்க சொத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு நிலஎடுப்பு செய்ததற்கு அரசு தினத்தந்தி நாளிதழ் வெளியிட்ட அறிவிப்பு |
| பி.வா.சா.ஆ.3 | 26.06.2023 | தாவா 2 வது லக்கச் சொத்திற்கு பட்டா எண்.866ல் 3,4 பிரதிவாதிகளின் தகப்பனார் வெங்கு பெயரில் உள்ள 10 ( 1 ) கணிணி பட்டா நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 10.11.2025 | தாவா 2 வது லக்கச் சொத்திற்கு பட்டா எண்.866ல் 3 ,4 பிரதிவாதிகளின் தகப்பனார் வெங்கு பெயரில் உள்ள 10 ( 1 ) கணிணி பட்டா நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 02.05.2013 | தாவா 2 வது லக்கச் சொத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக நிலஎடுப்பு செய்தது சம்பந்தமாக பிரதிவாதி தரப்பிற்கு வந்த விசாரணை அறிவிப்பு அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 30.08.2013 | தாவா 2 வது லக்கச் சொத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக நிலஎடுப்பு செய்தது சம்பந்தமாக பிரதிவாதி தரப்பிற்கு வந்த இரண்டாவது விசாரணை அறிவிப்பு அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 30.01.2014 | தாவா 2 வது லக்கச் சொத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக நிலஎடுப்பு செய்தது சம்பந்தமாக பிரதிவாதி தரப்பிற்கு வந்த மூன்றாவது விசாரணை அறிவிப்பு அசல் |
| பி.வா.சா.ஆ.8 | 26.06.2023 | 1ம் வாதி பெயரில் உள்ள தாவா 1 வது லக்கச் சொத்துக்கான 10 ( 1 ) கணிணி பட்டா எண்.68ன் நகல் |
| பி.வா.சா.ஆ.9 | 17.11.2025 | 3ம் பிரதிவாதி அழகு பெயரில் செலுத்தியுள்ள சொத்து வரி ரசீது இணையவழி நகல் |

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:30:28 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.10 | --- | 3 ம் பிரதிவாதி அழகு பெயரில் மின் கட்டணம் செலுத்திய விபரங்களுக்கான Status Report இணையவழி நகல் |
| பி.வா.சா.ஆ.11 | 14.09.2015 | வெங்கு என்பவர் 21.03.1997 ம் தேதியன்று இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.12 | 21.12.2015 | மலைச்சாமி என்பவர் 06.12.2015 ம் தேதியன்று இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.13 | --- | 3 ம் பிரதிவாதியின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.14 | 15.07.2009 | 3 ம் பிரதிவாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.15 | --- | 3 ம் பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.03.30 18:30:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**District Munsif Court**

**Manamadurai**

**OS.No. 1/2023**

**Fair / Draft Judgment**

**Dated 30.03.2026**